**அண்ணாகிராமம் ஊராட்சி ஒன்றியம் பண்டரக்கோட்டை ஊராட்சி மன்ற தலைவர் அவர்களின் நடவடிக்கைகள் முன்னிலை:திருமதி.S.கங்காயி.,**

ந.க.எண்: /2024 நாள்;12.01 .2024

பொருள்: மனைப்பிரிவு அங்கீகாரம் - அண்ணாகிராமம் ஊராட்சி ஒன்றியம் - பண்டரக்கோட்டை ஊராட்சி கிராம சர்வே எண்.15/4 ஏக்கர் 1.21 செண்ட் (அ) 4900.00 ச.மீ. பரப்பளவு கொண்ட உத்தேசிக்கப்பட்டுள்ள குடியிருப்பு மனைப்பிரிவிற்கு கொள்கை அளவிலான ஒப்புதல் வழங்குதல் - தொடர்பாக.

பார்வை:
1. உதவி இயக்குநர் (பொ) மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம் எண்.34 தமிழ் முத்து நகர் கோண்டூர் கடலூர் .6 அவர்களின் ந.க.எண்.ROC No.QHC9W9BW/TCP/2023/2024/TCP நாள் : 11.01.2024
2. அரசாணை எண் 138 வீட்டு வசதி மற்றும் வளர்ச்சித்துறை நாள் 04.06.2006
3. அரசாணை எண் 79 வீட்டு வசதி மற்றும் வளர்ச்சித்துறை நகர்புற வளர்ச்சித்துறை (UD) (3) நாள் 04.05.2017
4. அரசாணை எண் 181 வீட்டு வசதி மற்றும் நகர்புற வளர்ச்சித்துறை (UD) (3) நாள் 09.12.2020
5. பண்டரக்கோட்டை ஊராட்சிமன்ற தீர்மாணம் எண்.270/12.01.2024

ஆணை:

பார்வை 2,3,4, ல் காணும் அரசாணைகளின்படி கிராம ஊராட்சிகளில் உள்ள உத்தேச குடியிருப்பு மனைப்பிரிவிற்கு கொள்கை அளவிலான ஒப்புதல் அளித்தல் தொடர்பாக வழிக்காட்டி நெறிமுறைகள் அளிக்கப்பட்டுள்ளது.

கடலூரர் மாவட்டம் அண்ணாகிராமம் ஊராட்சி ஒன்றியம் பண்டரக்கோட்டை ஊராட்சி கிராம சர்வே **எண்.15/4 - ஏக்கர் 1.21 செண்ட் (அ) 4900.00 ச.மீ** பரப்பளவு கொண்ட குடியிருப்பு மனைப்பிரிவிற்கு நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர்(பொ) எண்.34 தமிழ்முத்து நகர் கோண்டூர் கடலுரர்.6 அவர்களின் **ம.வ/ந.ஊ.உ.இ.(க.மா) எண். 08/2024** க.மா.நாள்: 11-01-2024 என எண்ணிடப்பட்டு திட்ட அனுமதி அளிக்கப்பட்டுள்ளது.

நகர் ஊரமைப்பு துறை உதவி இயங்குநர் (பொ) எண்.34 தமிழ்முத்து நகர் கோண்டூர் கடலூர்.6 அவர்களின் கடிதத்தின் அடிப்படையில் திரு.M.விஸ்வநாதன், கதவு எண்.1018, மாரியம்மன் கோவில் தெரு, ஒறையூர் ( ம ) நல்லூர்பாளையம் என்பவரால் பண்ரடக்கோட்டை ஊராட்சியில் அமைக்கப்பட்டுள்ள குடியிருப்பு மனைப்பிரிவில் அமைந்துள்ள உத்தேச சாலை மற்றும் மூலை முடக்கு 1106.55 ச.மீ, மற்றும் ஊராட்சிக்கான ஒதுக்கீடு 'A' 28.75 .ச.மீ, இடம் பண்டரக்கோட்டை ஊராட்சி மன்ற தலைவர் பெயருக்கு மனைப்பிரிவு உரிமையாளரால் தானபத்திரம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. மேலும் TANGEDCO ( B ) என குறிப்பிட்டுள்ள 25.63 ச.மீ இடம் தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகத்திற்கு தான பத்திரம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

மேலும் திரு.M.விஸ்வநாதன், கதவு எண்.1018, மாரியம்மன் கோவில் தெரு, ஒறையூர் (ம) நல்லூர்பாளையம் என்பவரால் மனைப்பிரிவிற்கு கூராய்வு கட்டணமாக ரூ1000/-ம் மற்றும் நிலப்பயன் மாற்ற கட்டணமாக சந்தை மதிப்பில் 3% ரூ.2,06,000/-ம் உரிய கணக்கு தலைப்பில் மனை உரிமையாளரால் செலுத்தப்பட்டுள்ளது. மேலும் நன்னிலை வரி கட்டணத்தில் 20% தொகையை ARMED FORCES RLAG DAY FUND பெயருக்கு கொடி நாள் நிதியாக மனை உரிமையாளரால் வங்கி வரைவோலை செலுத்தப்பட்டுள்ளது.

எனவே, கீழ்காணும் நிபந்தனைகளுக்குட்பட்டு அண்ணாகிராமம் ஊராட்சி ஒன்றியம் பண்டரக்கோட்டை ஊராட்சி கிராம **சர்வே எண்.15/4 - ஏக்கர் 1.21 செண்ட் (அ) 4900.00 ச.மீ** பரப்பளவு கொண்ட குடியிருப்பு மனைப்பிரிவிற்கு அனுமதி அளித்து உத்தரவிடப்படுகிறது.

## நிபந்தனைகள்

1. நகர் ஊரமைப்பு துறையால் அங்கீகரிக்கப்பட்ட வரைபடத்திற்கு மாறாக மனையின் அளவுகள் சாலைகளின் அமைப்புகள், அளவுகள், பொது ஒதுக்கீடு அளவுகள் ஆகியவற்றை மாற்றுதல் மற்றும் மனையை மேலும் உட்பிரிவு செய்தல் ஆகியவற்றை எக்காரணத்தை முன்னிட்டும் நகர் ஊரமைப்புத் துறையின் முன் ஒப்புதல் இன்றி செய்தல் கூடாது.

2. இரு சாலைகள் சந்திக்கும்ம இடத்தில் அமையும் மனைகளின் மூலைகள் அங்கீகரிக்கப்பட்ட வரைபடத்தில் கண்டுள்ள திருப்பத்தோடு (splay) அமைக்கப்பட வேண்டும்.

3. அங்கீகரிக்கப்பட்ட வரைபடத்தில் கட்டப்பட்டுள்ள எந்தவொரு மனையையும் பொது காரணங்களுக்காக தேர்வு செய்யப்பட்டுள்ள மனைகள் தவிர மற்ற மனைகளை குடியிருப்பு வீடு கட்டுவதற்கு மட்டுமே பயன்படுத்தப்பட வேண்டும். மேலும் மனை உபயோகம். மற்றும் கோரும் இடங்களில் மட்டுமே TNCDBR- 2019 ல் குறிப்பிட்டுள்ளவைகளுக்கு மட்டுமே நகர் ஊரமைப்பு துறையின் முன் அனுமதி பெறப்பட்ட பின்னரே உள்ளாட்சியால் அனுமதிக்கப்பட வேண்டும்.

4. மனைப்பிரிவில் பள்ளமாக உள்ள பகுதியை தெருமட்டத்திற்கு உயர்த்தப்பட வேண்டும்.

5. 7.2 மீட்டர் அகலத்திற்கு அதிகமாக உள்ள எல்லா தெருக்களில் நிழல் தரும் மரங்கள் எதிர்த்தாற்போல் அடுத்தடுத்தது 9 மீட்டர் துரத்திற்கு மேற்படாமல் சாலையின் எல்லையிலிருந்து 1 மீட்டருக்குள் அமைக்கப்பட வேண்டும்.

6. மனுதாரர் சமர்ப்பித்துள்ள நில உரிமை ஆவணங்களின்படி நில உரிமம் குறித்து பரிசீலிக்கப்படுகிறது. எனவே உண்மையின் நில உரிமை இல்லாத இடத்திற்கு மனைப்பிரிவு அங்கீகரிக்கப்பட்டதற்கான காரணத்திற்காக எந்த உரிமையும் கொண்டாட முடியாது எனவும் தெரிவிக்கப்படுகிறது.

7. மனையில் ஊடே குறைந்த அழுத்த/ உயர் அழுத்த மின்கம்பிப் பாதை / தந்திக் கம்பிப் பாதை அமைந்தால் கம்பிப் பாதையை சாலையின் விளிம்பிற்கோ அல்லது அங்கீகரிக்கப்பட்ட மமைனப்பிரிவு வரைபடத்தில் காண்கித்துள்ளவாறோ மாற்றி அமைக்க வேண்டும்.

8. இம்மனைப்பிரிவில் நிலங்கள் தொடர்பான மனைப்பிரிவு உரிமையாளர் சார்பதிவாளர் அலுவலகத்திலிருந்து பெற்று சமர்பித்த வில்லலங்க சான்றின் சரித்னமையை நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர், கடலூர் மாவட்டம், கடலூர் அவர்கள் உறுதி செய்து வழங்கிய செயல்முறை ஆணையின் அடிப்படையில் மனைப்பிரிவு வரன்முறைப்படுத்தப்பட்டது. இதில் ஏதேனும் தவறுகள் அல்லது ஆவணங்களின் சரித்தன்மை குறித்தும் மேலும் மனைப்பிரிவில் வழக்குகள் ஏதும் நிலுவையில் இருப்பது கண்டறியப்படின் ஒட்டுமொத்த மனைகளின் அங்கீகாரம் ரத்து செய்யப்படுவதுடன் சட்டப்பூர்வமான நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

<u>அங்கீகரிக்கப்பட்ட மனைப்பிரிவின் ஒதுக்கீடு விபரம்</u>

| ஒதுக்கீடு விபரம் | | அளவுகள் | விழுக்காடு |
|---|---|---|---|
| மனைப்பிரிவு இடத்தின் பரப்பளவு | - | ஏக்கர் 1.21 செண்ட் அல்லது ( 4900.00 ச.மீ ) | -- |
| ஒதுக்கிய மனைகள் | - | 23 | -- |
| <u>பொது ஒதுக்கீடு</u><br>மனுதாரர் உள்ளாட்சிக்கு ( பூங்கா ) தானமாக ஒப்படைக்கப்பட்டது | - | பூங்கா பரப்பிற்கு(OSR) அரசு வழிகாட்டி நிலமதிப்பு செலுத்தப்பட்டுள்ளது | -- |
| 1. உத்தேச சாலைகள் மற்றும் மூலை முடக்கு | - | 1106.55 ச.மீ | -- |
| 2. உள்ளாட்சிக்கான ஒதுக்கீடு ( A ) | | 28.75 ச.மீ | 0.75% |
| 3. தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகத்திற்கானது ( B ) | - | TANGEDCO = 25.63 ச.மீ | 0.67% |

ஊராட்சி மன்ற தலைவர்
பண்டரக்கோட்டை ஊராட்சி
அண்ணாகிராமம் ஊராட்சி ஒன்றியம்

தலைவர்,
பண்டரக்கோட்டை ஊராட்சி,
அண்ணாகிராமம் ஒன்றியம்.

பெறுதல்

**திரு.M.விஸ்வநாதன்**
கதவு எண்.1018, மாரியம்மன் கோயில் தெரு
நல்லூர்பாளையம்
ஒறையூர்

நகல்: ஊரமைப்பு உதவி இயக்குநர், கடலூர் மாவட்டம், அவர்களுக்கு தகவலுக்காக பணிந்தனுப்படுகிறது.

நகல்: உதவி இயக்குநர் ( ஊராட்சிகள் ) கடலூர் அவர்களுக்கு தகவலுக்காக பணிந்தனுப்படுகிறது.

நகல்: சார்பதிவாளர், சார்பதிவாளர் அலுவலகம், புதுப்பேட்டை.

நகல்: ஊராட்சி மன்றத்தலைவர். பண்ரடக்கோட்டை ஊராட்சி. அண்ணாகிராமம் ஊராட்சி ஒன்றியம்.

நகல்: பண்ரடக்கோட்டை ஊராட்சி இருப்பு கோப்பிற்கு